உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ-சேஷாத்திரிசிவனார் அருளிச்செய்த

தத்துவக்கட்டளையென்று வழங்குகின்ற

# நானாசீவவாதக்கட்டளை.

இஃது

சமிவனக்ஷேத்திரமென்னுங்கோயிலூர்

**ஸ்ரீ-முத்துராமலிங்க சுவாமிகளின்**

ஆதீனத்திற்குரிய

**ஸ்ரீ-சிதம்பரசுவாமிகள்**

மாணாக்கர்களிலொருவராகிய

**அ-இராமசுவாமிகளால்**

கோயிலூர் ஏட்டுப்பிரதிப்படி

பரிசோதித்து

சென்னை:

**மிமோரியல் அச்சுக்கூடத்திற்**

பதிப்பிக்கப்பட்டது.

விய௵ சித்திரை௴

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# நாஞூசீவவாதக்கட்டளை.

சுத்தப்பிரமமா யிருக்கின்ற சர்வசாட்சியி னிட த்திலே அக்கினியிற்சூடுபோலஅபின்னமாகவொரு சத்தியுண்டு. அந்தச்சத்தி அந்தப்பிரமத்தி லடங்கி யிருக்கும்போது சுத்தப்பிரமமென்று பெயர். இந் தச்சத்தி விசிரிம்பித்துச் சுத்தப்பிரமத்தை வியா பிக்கும்போது பரைவியாபகத்துக்குள் ளிருந்தபடி யினாலே பரப்பிரம மென்று பெயராயிற்று.

இலட்சணசூனியமா யிருக்கின்ற விந்தச்சத்தி க்குப் பிரமத்தினுடைய சந்நிதானத்திற் புருஷசமு கத்திலே ஸ்திரீக்கு இன்பஞ்சனித்தாற்போல விகி ர்த குணமற்ற சாந்தரச தமோகுண முண்டாயி ன. இந்தச் சுத்தசாந்தத்திற்கு ஆனந்தரூப சத்தி யென்று பெயர். சுத்தரசத்திற்குச் சித்துரூபசத்தி யென்றுபெயர். சுத்த தமத்திற்குச் சத்துரூபசத்தி யென்று பெயர். இந்தக்காரணமான வானந்தரூப சத்தியுடனே பரப்பிரமங் கூடிச் சர்வானந்த சுமூ த்தியை யடைகின்றபோது பரப்பிரம மென்கின்ற பெயர் போய்ப் பரமானந்தனென்கின்ற பெயர் வந் தது. இந்தப்பரமானந்தர் சித்துரூப சத்தியுடனே

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# நானாசீவவாதக்கட்டளை.

சுத்தப்பிரமமாயிருக்கின்ற சர்வசாட்சியினிடத்திலே அக்கினியிற்சூடுபோலஅபின்னமாகவொரு சத்தியுண்டு. அந்தச்சத்தி அந்தப்பிரமத்திலடங்கியிருக்கும்போது சுத்தப்பிரமமென்று பெயர். இந்தச்சத்தி விசிரிம்பித்துச் சுத்தப்பிரமத்தை வியாபிக்கும்போது பரைவியாபகத்துக்குள்ளிருந்தபடியினாலே பரப்பிரமமென்று பெயராயிற்று.

இலட்சணசூனியமாயிருக்கின்ற விந்தச்சத்திக்குப் பிரமத்தினுடைய சந்நிதானத்திற் புருஷசமுகத்திலே ஸ்திரீக்கு இன்பஞ்சனித்தாற்போல விகிர்த குணமற்ற சாந்தரச தமோகுண முண்டாயின. இந்தச் சுத்தசாந்தத்திற்கு ஆனந்தரூப சத்தியென்றுபெயர். சுத்தரசத்திற்குச் சித்துரூபசத்தியென்றுபெயர். சுத்த தமத்திற்குச் சத்துரூபசத்தியென்றுபெயர். இந்தக்காரணமான வானந்தரூப சத்தியுடனே பரப்பிரமங்கூடிச் சர்வானந்த சுமுத்தியை யடைகின்றபோது பரப்பிரம மென்கின்ற பெயர் போய்ப் பரமானந்தனென்கின்ற பெயர் வந்தது. இந்தப்பரமானந்தர் சித்துரூப சத்தியுடனே

கூடிச் சர்வப்பிரகாசமென்கின்ற சொற்பனாவத்தை
யை யடைகின்றபோது பரமானந்த னென்கின்ற
பெயர் போய்ப் பரிபூரண னென்கின்ற பெயர்வந்
தது. இந்தப் பரிபூரணர் சத்துரூப சத்தியுடனே
கூடிச் சர்வவியாபகமென்கின்ற சாக்கிராவத்தை
யை யடைகின்றபோது பரிபூரணனென்கின்ற பெயர்
போய்ப் பரனென்கின்ற பெயர்வந்தது.

இந்த அகண்டபரிபூரண சச்சிதானந்தப் பிர
மத்தினிடத்திலே சுத்தியில் ரசிதந்தோன்றினாற்
போல மூலப்பிரகிருதி யென்றொரு சத்தியுண்டா
யிற்று. அந்தமூலப்பிரகிருதியும் விகிர்தகுணமாகிய
முக்குணத்துடனே கூடியிருக்கும். அந்தப்பிரகிரு
தியின் சாத்துவிதகுணத்தை மாயையென்றுஞ் சர்
வகாரணவுபாதியென்றும் ஈசுரகாரண சரீரமென்றுஞ்
சொல்லப்படும். இந்தமாயையினிடத்திலே நிர்மல
சலப்பிரதி விம்பம்போலப் பிரமஞ்சுலட்சணமா
கப் பிரதிவிம்பிக்கும். இந்த விம்பசைதன்யத்தைச்
சர்வக்ஞராகிய ஈசுரனென்று சொல்லப்படும்.

இந்தச் சாத்திககுணமாயையினிடத்திலே சா
த்திகத்திற் சாத்திகம் சாத்திகத்தி லிராசதம் சாத்
திகத்திற் றாமதமென்று மூன்றுகுண முண்டாயி
ன. இதிற் சாத்திகத்திற் சாத்திகம் பிரதானமாகும்
போது அதிற் பிரதிவிம்பித்த வீசுரன் சகத்தை இர
ட்சிக்கையினால் விஷ்ணுவென்று சொல்லப்படும்.

சாத்திகத்தி லிராசதம்பிரதான மாகும்போது அதிற் பிரதிவிம்பித்த வீசுரன் சகத்தைச் சிருஷ்டிக்கையி னால் பிரமாவென்று சொல்லப்படும். சாத்திகத் திற் றாமதம் பிரதானமாகும்போது அதிற் பிரதி விம்பித்த வீசுரன் சகத்தை யுபசங்காரம் பண்ணு கையினால் உருத்திரனென்று சொல்லப்படும். இப் படி மூலப்பிரகிருதியின் சாத்திககுணகற்பனை சொ ல்லப்பட்டது.

இனி மூலப்பிரகிருதியி னிராசதகுண மனேக ரூபமாய்ப் பிரிந்து அவித்தைகளென்றுஞ் சீவகா ரண சரீரங்களென்றும் ஒன்றுக்கொன்று தாரதன் மியமாகச் சொல்லப்படும். இந்த அவித்தைக ளிட த்திலும் மலினசலப்பிரதி விம்பம்போலப் பிரம சைதன்னியம் பிரதிவிம்பிக்கும். இந்த விம்பசை தன்யங்களைக் கிஞ்சிக்ஞனென்றுஞ் சீவசிதாபாசனெ ன்றும் பிராக்ஞனென்றுஞ் சொல்லப்படும். இந்த அவித்தைகளிடத்திலேயும் இராசதத்திற் சாத்தி கம் இராசதத்தி லிராசதம் இராசதத்திற் றாமத மென்று மூன்று குணமுண்டு. இராசதத்திற் சாத் திகம் பிரதானமாகும்போது அதிற் பிரதிவிம்பித்த சிதாபாசன் தத்துவக்ஞான நிஷ்டனாவன். இராச தத்திலிராசதம் பிரதானமாகும்போது அதிற் பிரதி விம்பித்த சிதாபாசன் காமக்குரோதபராயக் கன் மநிஷ்டனாவன். இராசதத்திற் றாமதம் பிரதான

மாகும்போது அதிற் பிரதி விம்பித்த சிதாபாசன் சோம்பல்நித்திரை மயக்கங்களையடைவன். இப்படி மூலப்பிரகிருதியி னிராசதகுண கற்பனை சொல்லப் பட்டது.

இனி மூலப்பிரகிருதியின் றாமத குணத்திற்கு ஆவரணம் விட்சேபமென் றிரண்டு சத்திகளுண்டு. இதில் ஆவரணசத்தியென்பது தத்துவக்ஞானியை யும் ஈசுரனையுந் தவிர மற்றச் சீவருக்கெல்லாஞ் சரீரத்திரயம் சிதாபாசன் சாட்சி சைதன்யங்களை யொன்றுக்கொன்று பேதந் தெரியவொட்டாமல் மறைக்கும். இதனால் மறைபட்ட சீவன் இருபத்தொன்பது தத்துவங்களையு மொருமைப்பாடாக நானென் றபிமானிப்பன். இந்தவபிமானத்தை யகங்காரக் கிரந்தியென்றும் சம்சாரபந்தமென்றுஞ் சொல்லப் படும். சற்குருகடாட்சத்தினாலே இந்த ஆவரண நீங்கி இருபத்தொன்பது தத்துவத்திற்கு மொன் றுக்கொன்று பேதந்தெரிகின்றதே முத்தி. இப்படி ஆவரண சத்தியின்காரியஞ் சொல்லப்பட்டது.

இனி விட்சேப சத்தியினிடத்திலுஞ் சத்த தன்மாத்திரையான வாகாசம் பிறந்தது. ஆகாசத் திலும் பரிசதன்மாத்திரையான வாயுபிறந்தது. வாயுவிலும் ரூபதன்மாத்திரையான அக்கினிபிறந்தது. அக்கினியிலும் ரசதன்மாத்திரையான அப்புப்பிறந்தது. அப்புவிலும் கந்ததன்மாத்திரையான பிரு

துவிபிறந்தது. இந்த சூட்சுமபஞ்சபூதத்திற்குக் காரணமாயிருக்கின்ற விட்சேப சத்தியினிடத்திலே தாமதத்திற் சாத்திகம் தாமதத்தி லிராசதம் தாமதத்திற்றாமதமென்று அற்பங்கருவிருந்தபடியினாலே அதன் காரியமான இந்தத் தன்மாத்திரையான பஞ்சபூதங்களும் முக்குணத்துடனே பிறந்தன. இந்தப்பஞ்சபூதங்களுக்குத் தன்மாத்திரைகளென்றும் அபஞ்சிகிர்த பூதங்களென்றுஞ் சூட்சும பூதங்களென்றும் முக்குணபூதங்களென்றுஞ் சாத்திரங்களிலே சொல்லப்படும்.

இந்தச் சூட்சுமபூதங்களினின்று சூட்சும சரீரங்களுந் தூலபூதங்களும் பிறந்தன. அதெங்ஙனென்னில் ஆகாசமுதலான பஞ்சபூதங்களினுடைய சாத்திகாம்சத்திலே பூதத்திற் கோரொருமாத்திரையெடுத்து ஒன்றாகக் கூட்டிவைத்தது அந்தக்கரணம். இந்த அந்தக்கரணத்தி லாகாசத்தினம் சங்கூடினதற் கடையாளம். இந்த அந்தக்கரணமும் ஆகாசத்தைப்போலச் சகலமான கேள்விக்கு மிடங்கொடுத்துத் தரிக்கின்றது. இப்படித் தரிக்கின்ற விருத்திக்குத் தேயுசுவென்று பெயர். இந்தவந்தக்கரணத்தில் வாயுவினம்சங்கூடினதற் கடையாளம். இந்த வந்தக்கரணமும் வாயுவைப்போல வலைகிறது. இப்படி யலைகின்ற விருத்திக்கு மனமென்று பெயர். இந்தவந்தக்கரணத்தில் அக்கினியி னம்சங்

கூடினதற் கடையாளம். இந்த வந்தக்கரணமும் அக்கினியைப்போல இது இன்னதென்று விளக்கு விக்கிறது. இப்படி விளக்குவிக்கின்ற விருத்திக்குப் புத்தியென்றுபெயர். இந்தவந்தக்கரணத்தில் அப்புவினம் சங்கூடினதற் கடையாளம். இந்தவந்தக் கரணமும் அப்புவைப்போல விடயங்களிற்பற்றி யிழுக்கின்றது. இப்படி இழுக்கின்ற விருத்திக்குச் சித்தமென்று பெயர். இந்த வந்தக்கரணத்திற் பிரு துவியினம் சங்கூடினதற்கடையாளம். இந்தவந்தக் கரணமும் பிருதுவியைப்போலக் கடினமாகநின்று நானென்று அபிமானிக்கின்றது. இப்படி அபிமா னிக்கின்ற விருத்திக்கு அகங்காரமென்று பெயர்.

இன்னம் ஆகாசமுதலான பஞ்சபூதங்களினு டைய சாத்திகாம்சத்திலே பூதத்திற் கோரொருமா த்திரை எடுத்துத் தனித்தனியே வைத்தது சுரோ த்திராதி ஞானேந்திரியமென்று சொல்லப்படும். இதிற் சுரோத்திர மாகாசத்தினம் சமானபடியினு லே யாகாசத்தின் குணமான சப்தமாத்திரத்தை யறியும். துவக்கு வாயுவினம்சமானபடியினுலே வா யுவின்குணமான பரிசமாத்திரத்தையறியும். சட்சு அக்கினியி னம்சமானபடியினுலே அக்கினியின் குணமான ரூபமாத்திரத்தை யறியும் சிங்நுவை யப்புவி னம்சமானபடியினுலே அப்புவின் குண

மான ரசமாத்திரத்தை அறியும். ஆக்கிராணம் பிரு துவியினம்சமானபடியினலே பிருதுவியின் குண மான கந்தமாத்திரத்தை யறியும் இப்படி யைந்து மொன்ரேடொன்று கூடாதபடியினலே ஒன்று மற்றொன்றின் குணங்களைக் கிரகிக்கவறியாது. அந் தக்கரணத்திலைந்துமாத்திரையு மொன்ருய்க் கூடி னதுகொண்டு ஐந்திந்திரியத்தினலும் ஐந்துவிட யத்தையும் அறியும். இந்தச் சாத்தீககுணத்திலுண் டான வந்தக்கரணமைந்தும் ஞானேந்திரிய மைந் துமாகப் பத்துஞ் சாத்திகாம்சமானபடியினலே ஞானசாதனமாயிற்று.

இன்னம் ஐந்து பூதத்தினுடைய விராசதாம் சத்திலே பூதத்திற் கோரொருமாத்திரையெடுத்து ஒன்ருகக்கூட்டிவைத்தது வியாஞதி பஞ்சவாயுக்க ளாயின. இதில் வியானவாயு ஆகாசத்தினம் சமா னபடியினலே ஆகாசத்தைப்போலச் சர்வாங்கமும் வியாபித்திருக்கும். பிராணவாயு வாயுவினம்சமான படியினலே வாயுவைப்போல இருதயத்திலிருந்து நாசியாதிபரியந்தம் அலையும். அபானவாயு அக்கி னியினம்சமானபடியினலே அக்கினியைப்போலச் சாடராக்கினியாக வுஷ்ணித்துக் கொண்டு குத த்தைப்பற்றி நின்று உண்ட அன்னபாஞதிகளைச் சீரணிப்பிக்கும். சமானவாயு அப்புவினம் சமான படியினலே சரீரநடுவான நாபித்தானத்தினின்று

டட அன்னபானாதிகளைச் சகல நாடிகளிலும் ப்புவைப்போல இழுக்கும். உதானவாயு பிருது னம் சமானபடியினாலே கண்டத்தைப்பற்றி நி பிருதுவியைப்போலக்கடினமாக நின்று கடை ம். இந்தப் பஞ்சவாயுக்களையுமல்லாமல் வாந்தி ணிவைக்கின்றவன் நாகனென்றும், இமைத்து ழிக்கின்றவன் கூர்மனென்றும், குறுகுறுத்துத் முகின்றவன் கிரிகரனென்றும், கொட்டாவிக் கொள்ளுகின்றவன் தேவதத்தனென்றும், வீங்கு விக்கின்றவன் தனஞ்சயனென்றும் வேறேயைந்து வாயுக்களுண்டென்று சிலர் சொல்லுவர். இந்த வைந்தும் பிராணனுடைய தொழிலானபடியினா லே வேறல்ல.

இன்னம் ஆகாசமுதற் பஞ்சபூதங்களினுடை ய விராசதாம்சத்திலே பூதத்திற் கோரொருமாத்தி ரை யெடுத்துத் தனித்தனியேவைத்தது வாக்காதி கன்மேந்திரியமென்று சொல்லப்படும். இதிலாகாச த்தினிடமாக வாக்குவசனிக்கும். வாயுவினிடமா கப் பாணியிடுதலேற்றல் செய்யும். அக்கினியினிட மாகப்பாதம் நடக்கும். அப்புவினிடமாகப் பாயு ரு மலசலாதிகளை வெளியிலே யிழுக்கும். பிருதுவி யினிடமாக வுபத்தஞ் சுகத்தைப் பண்ணும். இந்த வைந்தும் தனித்தனியே யிருந்தது கொண்டு மறு தொழிற் செய்யமாட்டாது. வியானதிவாயு வைந்

து மாத்திரையு மொன்றாய்க் கூடினது கொண்டு கன்மேந்திரிய மைந்தின் வழியினாலு மைந்து தொழிலையுஞ் செய்து முடிக்கின்றது. இந்த வாயுக்களைந்துங் கன்மேந்திரிய மைந்தும் ஆகப்பத்து மிராசதர்ம்சமான படியினாற் கிரியாசாதனமாயின.

அந்தக்கரணம்-ரு-ம், ஞானேந்திரியம்-ரு-ம், வாயுக்கள்-ரு-ம், கன்மேந்திரியம்-ரு-ம், ஆக-உ0-தத்துவமும் சூட்சுமசரீரமென்று சொல்லப்படும். இந்தச்சூட்சுமசரீரத்தை மாயாப்பிரதிவிம்பராகவிருக்கின்றவீசுரன் அவித்தையாப்பிரதிவிம்பராயிருக்கின்ற சீவருக்குப்பேருக்கொவ்வொரு சரீரஞ் சிருட்டித்துக்கொடுத்தார். அப்போது பஞ்சபூதத்தினுடைய சாத்தீகாம்சமு மிராசதாம்சமுஞ் செலவழிந்தன. தாமத குணமாத்திரஞ் சேடித்தது. சூட்சமசரீரம் வாங்காத சீவருக்கெல்லாமின்னமொரு சிருட்டிக்காகட்டுமென்று நிறுத்தினார். இப்படிச் சூட்சும சரீரஞ்சொல்லப்பட்டது.

இனித் தூல பூத வுற்பத்தி சொல்லுகிறோம். அதெங்ஙனெனில் மிஞ்சின தாமதமாயிருக்கின்ற வைந்து பூதத்தையு மொவ்வொன்றிரண்டாகப் பகுத்து முதற் பாதி யைந்தையு மொவ்வொன்று நாலாக்கி யிரண்டாம் பாதி யைந்துடனே தன்னம் சத்துடனே கூட்டாமல் மற்ற நாலு பூதத்துடனும் பூதத்திற் கரைக்கால் மாத்திரையாகக் கொடுக்கின்றது பஞ்

ண மென்று சொல்லப்படும். இப்படிப் பஞ்சீ ம் பண்ணின தூல பூதங்களிலே ஆகாசத்தி பரிசரூபரச கந்த மாகிய நான்கு குணமும் வி ப்பியமானபடியினால் அதிரிசியமாய்ப்போக நிச மாகிய சப்தமும் வாயுவிலே ரூபரசகந்த மாகி ன்றுகுணமும் வியாப்பியமானபடியினால் அதி யமாய்ப்போகக் காரணகுணமாகிய சப்தமும் குணமாகிய பரிசமும் அக்கினியிலேரசகந்தமா விரண்டுகுணமும் வியாப்பிய மானபடியினால் திரிசியமாய்ப்போகக் காரணகுணமாகிய சப்தப் சமும் நிசகுணமாகிய ரூபமும் அப்புவிலே கந் குணம் வியாப்பியமானபடியினால் அதிரிசியமாய் போகக் காரணகுணமாகிய சப்தப்பரிசரூபமும் நிச ணமாகிய ரசமும் பிருதுவியிலே சப்தப் பரிசரூ ரசகந்தமுந் தோன்றின.

முன் சூட்சுமபூதத்திலிருந்து சூட்சும சரீரம் பிறந்தாற்போலப் பஞ்சீகரணம் பண்ணின தூலபூ தத்தினின்று மாறுதத்துவமாய் நால்வகைப் பிறப் பாய் எழுவகைச்சாதியா யிருக்கின்ற தூலசரீரங்கள் பிறந்தன.

இதிலாறுதத்துவமாவ தேதென்றால் சர்மம், உதிரம், மாமிசம், சநாயு, அத்தி, மச்சை இந்தஆ றுவகையுந் தூலசரீரம். நால்வகைத்தோற்றமாவ

தேமெதன்றால் சராயுசம், அண்டசம், சுவேதசம், உற்பிச்சம் ஆகநாலு. மூன்றுசாதி யெதென்றால் இகலோக பரலோக புத்தி இருவகையுங் கொடுக்கி ன்ற மாநுடசரீரம் உத்தமசாதி, பரலோக புத்தி யைமறைத்து இகலோகபுத்திமாத்திரம் அறிகின்ற பசுபட்சிமுதலானவை மத்திமசாதி, இரண்டுலோ கத்துப்புத்தியையும்மறைத்திருக்கின்ற மரங்கொடி செடி அதன்மசாதி. இப்படிப் பிருதுவிதத்துவமா யிருக்கின்ற பூலோகத்திற் கண்டாற்போல அப்பு அக்கினி வாயு ஆகாசமென்னப்பட்ட தத்துவங்க ளினும் நிரைநிரையே பிதிர்லோகம் தெய்வலோக ம் யட்சகந்தருவலோகம் சித்தர் லோகங்களினும் நட்சத்திரமாகத்தோற்றுகின்ற சந்திரன்முதலான பிதிர்க்கள் சூரியன்முதலான தேவதைகள் கந்தரு வர் சித்தர் என்னப்பட்டதெல்லா முத்தமசரீரம். காமதேனு, அயிராவதம், அன்னம், கருடன்முத லாயின மத்திமசரீரம். கற்பகவிருட்சம், பாரிசாத முதலாயின அதன்மசரீரம்.

இந்தத்தூலசரீரமே அன்னமயகோசம். சூட் சுமசரீரம் மூன்றுகோசமா யிருக்கும். அதெங்ங னென்னில் பிராணவாயுவுங் கன்மேந்திரியமுங்கூ டிப் பிராணமயகோசம், மனதும் ஞானேந்திரியமு ங்கூடி மனோமயகோசம், புத்தியும் ஞானேந்திரிய முங்கூடி விஞ்ஞானமயகோசம், காரணசரீரமே

ஆமயகோசம். இப்படிப்பஞ்சகோசஞ் சொல்
ட்டன.
ஆறுதத்துவமாயிருக்கின்ற தூலசரீரத்திலே
மசரீரமிருக்கின்றதெப்படியென்னில் கா
கிரியமான வாக்கும் ஞானேந்திரியமான சிங்
யும் வாயிலிருக்கும். உதானவாயுவும் மனமுங்
த்திலிருக்கும். பிராணவாயுவும் புத்தியும்
கயத்தில்இருக்கும். சமானவாயுவுஞ்சித்தமும்
யிலிருக்கும். அபானவாயுவும் பாயுருவுங் குத
ல இருக்கும். வியானவாயுவும் ஞானேந்திரிய
ன துவக்கும் அகங்காரமுஞ் சர்வாங்கமும்வியா
கிருக்கும். உச்சியிலேதேயுசுங் கருவிழி நடுவியி
சட்சுயிந்திரியமும் காதுக்குள்ளேசுரோத்திரஇ
ரியமும் மூக்குக்குள்ளே ஆக்கிராண இந்திரியமு
ழுத்துக்குமேற் றனித்தனியே யிருக்கும். கழு
க்குக்கீழே கைகால் குய்யத்திம்பாணிபாதம் உ
தம் மூன்றும் தனித்தனியேயிருக்கும். இப்படி
தூலசரீரதத்துவம்-கூ-ம், அதிற்குடிபுகுந்த சூட்
சரீரதத்துவம்-உ0-ம், ஆகதத்துவம் - உகூ-ம்,
ஞ்சபூதத்தின் காரியமானபடியினாலே ஒருமைப்ப
டாகக் காரியசரீரமென்று சொல்லப்படும்.

காரணசரீரமும்சிதாபாசனும் சாக்கிரத்திலே
ந்தஇருபத்தாறு தத்துவத்துடனே கலந்துநின்ற
பாது விசுவனென்றும் வியவகாரிக சீவனென்று

ஞ் சொல்லப்படும். சொற்பனத்திலே தூலசரீரத்
தைக்கைவிட்டு அந்தக்கரணத்துடனே கூடிநின்ற
போது தைசதனென்றும் பிராதிபாதிக சீவனென்
றும் சொற்பனகற்பிதனென்றுஞ் சொல்லப்படும்.
சுழுத்தியிலே காரியசரீர மிருபத்தாறையுங் கைவிட்
டுக்காரணசரீரத்தைமாத்திரம் பொருந்தியிருக்கும்
போது பிராக்ஞனென்றும் பாரமார்த்திகசீவனென்
றுஞ்சொல்லப்படும். பிரமசைதன்னியஞ்சாக்கிரத்
துக்குச்சாட்சியா யிருக்கும்போது சீவாத்மாவென்
றுஞ்சொற்பனத்துக்குச் சாட்சியா யிருக்கும்போ
து அந்தராத்மாவென்றுஞ் சுழுத்திக்குச்சாட்சியா
யிருக்கும்போது பரமாத்மாவென்றும் அவத்தாத்
திரயசாட்சியா யிருக்கும்போது ஞானாத்மாவென்
றுங் கூடத்தனென்றுஞ் சொல்லப்படும். இப்படிச்சீ
வனுக்கு மூன்றுசரீரமும் மூன்றவத்தையுஞ்சொல்
லப்பட்டது.

இனி ஈசுரனுக்கு மூன்றுசரீரமும் மூன்றவத்
தையுஞ்சொல்லும்படி. லோககற்பனையாகத் தோற்
றுகின்ற தூலபஞ்சபூதங்களும் அதிற்றோன்றினமூ
ன்றுசாதியா யிருக்கின்ற தூலசரீர சமட்டியுங்கூடி
ஈசுர தூலசரீரமென்றும் விராட்டென்றுஞ்சொல்
லப்படும். இதனுடனேகூடிச் சாக்கிராவத்தையை
ப்பொருந்தி யிருக்கின்ற வீசுரன் வைசுவானரனெ
ன்றும் இந்த இருவகைக்கும் அதிஷ்டான சைதன்

...மாவென்றுஞ் சொல்லப்படும். சூட்சமபூத ...ஆம் அதிற்றோன்றின சூட்சுமசரீர சமட்டி ...ஈசுரசூட்சுமசரீரமென்றும் இரணியகர்ப்ப ...மும் சொல்லப்படும். இதனுடனேகூடிசொ ...த்தையைப் பொருந்திருக்கின்ற வீசுரன் ...த்மாவென்றும் இந்த இருவகைக்கும் அதி ...சைதன்யம் விஷ்ணுவென்றுஞ் சொல்லப். இந்தத்தூலசூட்சுமவிருவகைக்கும் வாசனை ...கூடினமாயை யீசுரகாரண சரீரமென்றும் ...யாகிருதமென்றுஞ் சொல்லப்படும். இதனு ...கூடிச் சுழுத்திபவத்தையைப் பொருந்திரு ...றவீசுரன் அந்தரியாமியென்றும் இந்த இருவ ...கும் அதிட்டான சைதன்யம் உருத்திரனென் ...சொல்லப்படும். சீவன் தன்மூன்றவத்தையிலு ...ன் மூன்றுசரீரமாக இருக்கின்ற விருபத்தேழுத ...வத்துடனும் நானென்று கலந்து நிற்கின்றாற் ...லவீசுரனுந் தம்முடைய மூன்றுசரீரமா யிரு ...ற முப்பத்திரண்டு தத்துவத்துடனும் மூன்ற ...தையிலுங் கலந்துநிற்பர்.

ஆகையினால் சிவசிதாபாசன் தன்சரீரமாத்திர ...கலந்து நிற்பன். ஈசுரன் தம்முடைய சரீரமாகி ...சகலசரீரங்களோடுஞ் சகலபிரபஞ்சங்களோடுங் ...ந்து நிற்பர். இந்தவிருவகைக்குஞ் சாட்சியாயி ...ன்ற பிரமசைதன்யமுஞ்சகலசரீரத்திலுஞ்சக

லபிரபஞ்சத்திலும் நிறைந்து அப்பாலும் பத்துத்
திக்கையும் அதிக்கிரமித்து எல்லையற்றிருக்கும்.

சீவனுக்குத் தூலசரீரவியவகாரத்துக்கு அன்
னமயமான சட்கோசதத்துவம்-௬, சூட்சுமசரீரத
த்துவம்-௨0, சீவன், ஈசுரன், அவித்தை, வித்தை, பிர
மம்-௫, ஆகதத்துவம்-௩௧, சூட்சுமசரீர வியவகாரத்
துக்குசூட்சுமசரீரதத்துவம்-௨0, சீவன், ஈசுரன், அ
வித்தை, வித்தை, பிரமம்-௫, ஆகத்தத்துவம்-௨௫,
காரணசரீரவியவகாரத்துக்குசீவன், ஈசுரன், அவித்
தை, வித்தை, பிரமம் ஆக-௫, சீவவியவகாரத்துக்கு
சீவன், ஈசுரன், பிரமம் ஆக-௩, சாட்சி வியவகாரத்
துக்குசாட்சி-௧, ஈசுரனுக்குத் தூலசரீர வியவகார
த்துக்குச் சமட்டி அன்னமயகோச தத்துவம்-௬, ச
மட்டி சூட்சுமசரீரதத்துவம்-௨0, சமட்டி, சீவன் அ
வித்தை-௨, ஈசுரன், வித்தை, பிரமம்-௩, பூதம்-௫, ஆ
கத்தத்துவம்-௩௬, சூட்சுமசரீர வியவகாரத்துக்கு
ச்சமட்டி சூட்சுமசரீரதத்துவம்-௨0, சமட்டி சீவன்
அவித்தை-௨, சூட்சுமபூதம்-௫, ஈசுரன், வித்தை, பிர
மம்-௩, ஆகத்தத்துவம்-௩0, காரணசரீர வியவகார
த்துக்கு, ஈசுரன், வித்தை, பிரமம்-௩, ஈசுரவியவகார
த்துக்கு ஈசுரன் பிரமம்-௨, பிரமவியவகாரத்துக்கு
பிரமம்-௧, இந்திரியவியவகாரத்துக்கு இந்திரியம்௧-
சட்கோசதத்துவம்-௬, கரணம்-௫, வாயு-௫, சீவன்,
ஈசுரன், அவித்தை, வித்தை, பிரமம்-௫, ஆகத்தத்து

உ, மனோராச்சிய வியவகாரத்துக்குக்கரணம்
ன், ஈசுரன், அவித்தை, வித்தை, பிரமம்-ரு, ஆக
வம் - ௯0, இப்படித் தத்துவங்களினுடைய
முமும் நிலையுஞ்சொல்லப்பட்டன.

னித் தத்துவமொடுங்குகின்றவழி சொல்லு
ம். அதெங்ஙன மென்னில் சகல சீவர்களிட
இருக்கின்றதூலசரீரங்களும் தனக்காதார
ாலபூதங்களுடனேமடிந்து பூதமாத்திரமா
குகும். இந்தத்தூலபூதங்களும் பஞ்சீகரணம்
த் தன்மாத்திரையான தாமதகுணபூதங்களா
கும். அப்போது கேவல விரணிய கர்ப்பாவத்
ன்று சொல்லப்படும். சூட்சுமசரீரம் இருப
துவமுங் கட்டுவிட்டுப் பூதங்களினுடையசா
குணமும் இராசத குணமுமாக வொடுங்கும்
மனென்னில் சகல பிராணிகளிடத்திலுமி
ற ஆகங்காரமும் ஆக்கிராணமும் உதான
முபத்த விந்திரியமும் பிருதுவியிலொடுங்
த்தமும் சிங்குவையும் சமானனும் பாயுரு
அப்புவிலொடுங்கும். புத்தியும் சட்சுவும் அபா
ம் பாதமும் அக்கினியிலொடுங்கும். மனதும்
கும் பிராணனும் பாணியும் வாயுவிலொடுங்
தேயுகம் சுரோத்திரமும் வியானனும் வாக்கு
சத்திலொடுங்கும். அப்போது பழையபடி
முக்குணபூதங்களாகும், இந்தச் சூட்சுமபூதங்

களும்பிருதுவி அப்புவிற்களைந்தொடுங்கும். அப்பு வும் அக்கினியிற்சுவறியொடுங்கும். விளக்குப்போ லஅக்கினியும் வாயுவிலணைந்தொடுங்கும். வாயுவு ம் ஆகாசத்தி லோய்ந்தொடுங்கும். ஆகாசமும்விட் சேபசத்தியிலொடுங்கும். ஆவரணசத்தியும் விட் சேபசத்தியும் மூலப்பிரகிருதியின் தாமதகுணமாத் திரமாய் ஆலமரம் ஆலவிரையி லொடுங்கினாற்போ ல இன்னம்ஒருசிருட்டிக்கு வித்தாக மாயையிலும் அவித்தையிலும் ஒடுங்கும். அதினுண்மையான மூலப்பிரகிருதி யென்றுசொல்லப்பட்ட விந்து நாத் துவத்திலொடுங்கும். அந்த விந்துவும் பாம்பென்கி றபெயர்போய்ப் பழுதையாய்க் கண்டாற்போலத் தனக்கதிட்டானசைதன்யமான பிரமசைதன்யமா த்திரமாக வொடுங்கும். இப்படிப் பொய்யெல்லாம் மெய்ப்பொரு ளொன்றாகக்கண்டு அதுவே சுபாவ சித்தமாய் நிசமாகவிருக்கின்ற தன்வடிவெனக்கண் டுதெளிந்து கவலைகெட்டிருக்கின்றவனே சீவன்மு த்தன். இப்படித் தத்துவங்களின் ஒடுக்கஞ் சொல் லப்பட்டது.

இப்படித்தோற்றி யொடுங்குகின்ற தத்துவம் ௩௫, அதெங்ஙனெனனில்பூதம்-௫, தூலசரீரதத்து வம்-௫, சூட்சுமசரீரதத்துவம்-௨0, காரணசரீரமா னமாயையவித்தை-௨, இதிற்பிரதிவிம்பித்த சீவன்

வம்-உஉ, மனோராச்சிய வியவகாரத்துக்குக்காரணம் ரு, சீவன், ஈசுரன், அவித்தை, வித்தை, பிரமம்-ரு, ஆக த்தத்துவம் - ௪0, இப்படித் தத்துவங்களினுடைய தோற்றமும் நிலையுஞ்சொல்லப்பட்டன.

இனித் தத்துவமொடுங்குகின்றவழி சொல்லு கிறோம். அதெங்ஙன மென்னில் சகல சீவர்களிட த்திலே இருக்கின்றதூலசரீரங்களும் தனக்காதார மான தூலபூதங்களுடனேமடிந்து பூதமாத்திரமா க ஒடுங்கும். இந்தத்தூலபூதங்களும் பஞ்சீகரணம் விட்டுத் தன்மாத்திரையான தாமதகுணபூதங்களா கமிஞ்சும். அப்போது கேவல விரணிய கர்ப்பாவத் தையென்று சொல்லப்படும். சூட்சுமசரீரம் இருப துதத்துவமுங் கட்டுவிட்டுப் பூதங்களினுடையசா த்வீககுணமும் இராசத குணமுமாக வொடுங்கும் அதெங்ஙனென்னில் சகல பிராணிகளிடத்திலு மி ருக்கின்ற ஆகங்காரமும் ஆக்கிராணமும் உதான வாயுவுமுபத்த விந்திரியமும் பிருதுவியி லொடுங் கும். சித்தமும் சிங்ஙுவையும் சமானனும் பாயுரு வும் அப்புவிலொடுங்கும். புத்தியும் சட்சுவும் அபா னனும் பாதமும் அக்கினியிலொடுங்கும். மனதும் துவக்கும் பிராணனும் பாணியும் வாயுவி லொடுங் கும். சேயுசும் சுரோத்திரமும் வியானனும் வாக்கு ம்ஆகாசத்தி லொடுங்கும். அப்போது பழையபடி யே முக்குணபூதங்களாகும். இந்தச் சூட்சுமபூதங்

களும்பிருதுவி அப்புவிற்கரைந்தொடுங்கும். அப்புவும் அக்கினியிற்சுவறியொடுங்கும். விளக்குப்போல அக்கினியும் வாயுவிலணைந்தொடுங்கும். வாயுவும் ஆகாசத்திலேமாய்ந்தொடுங்கும். ஆகாசமும்விட்சேபசத்தியிலொடுங்கும். ஆவரணசத்தியும் விட்சேபசத்தியும் மூலப்பிரகிருதியின் தாமதகுணமாத்திரமாய் ஆலமரம் ஆலவிரையிலொடுங்கினாற்போல இன்னமொருசிருட்டிக்கு வித்தாக மாயையிலும் அவித்தையிலும் ஒடுங்கும். அதினுண்மையான மூலப்பிரகிருதியென்றுசொல்லப்பட்ட விந்து தத்துவத்திலொடுங்கும். அந்த விந்துவும் பாம்பென்கிறபெயர்போய்ப் பழுதையாய்க் கண்டாற்போலத் தனக்கதிட்டானசைதன்யமான பிரமசைதன்யமாத்திரமாகவொடுங்கும். இப்படிப் பொய்யெல்லாம் மெய்ப்பொருளொன்றாகக்கண்டு அதுவே சுபாவசித்தமாய் நிசமாகவிருக்கின்ற தன்வடிவெனக்கண்டுதெளிந்து கவலைகெட்டிருக்கின்றவனே சீவன்முத்தன். இப்படித் தத்துவங்களின் ஒடுக்கஞ்சொல்லப்பட்டது.

இப்படித்தோற்றி யொடுங்குகின்ற தத்துவம் ௬௪, அதெங்ஙனென்னில்பூதம்-௫, தூலசரீரதத்துவம்-௪, சூட்சுமசரீரதத்துவம்-௨0, காரணசரீரமானமாயைஅவித்தை-௨, இதிற்பிரதிவிம்பித்தசீவன்

ஈசுரன்-உ, இதற்கெல்லாம் அதிட்டானசைதன்யமா யிருக்கின்ற பிரமம்-க, ஆகத்தத்துவம்-ஙசு.

இதிற்சீவருக்குச் சமுதாயம். பூதம்-ரு-மாயை க-மாயாப்பிரதிவிம்பரான ஈசுரன்-க-பிரமம்-க-ஆக இந்த எட்டுஞ்சகலபிராணிகளுக்குஞ் சமுதாயமாக வனுபவிக்கப்படும். மற்ற விருபத்தெட்டும் அவனவனுக்குப் பிறத்தக்காக வனுபவிக்கப்படும். அதெங்ஙனென்னில் பிருதுவிதத்துவம் ஒன்று இறக்கில் எல்லாருக்கும் ஆதாரமில்லை. மழைமறுக்கில் எல்லாருக்குஞ்சலமில்லை. தேயுவில்லாதிருந்தால் பாகமில்லை. வாடை-தென்றல் இல்லாவிட்டால் வாயுவியக்கமில்லை. ஆகாசமிறக்கில்ஒருவருக்கும் அவகாசமில்லை. மாயையும் மாயாப்பிரதிவிம்பருமிறக்கிற் சகலசமயத்துக்குந் தெய்வமில்லை. பிரமமில்லையோ ஒருத்தருக்குமறிவில்லை. ஆகையால் இந்தஎட்டும் எல்லாருக்குஞ் சமுதாயம். பிறத்தக்கெங்ஙனென்னில் ஒருத்தனுக்குத் தூலசரீரமிறக்கில் எல்லாருக்குந் தூலசரீரம் இறவாதபடியினாலும் சூட்சுமசரீரத்திலொருவனுக்கு அங்கவைகுல்லியம் வந்தால் எல்லாருக்கும் வாராதபடியினாலும் முத்தராயிருக்கின்ற சுகர் வாமதேவர் முதலானபேருக்கு அவித்தையுஞ்சீவனு மிறந்துபோயிருக்க மற்றபேருக்கெல்லாம் அவித்தையுஞ்சீவனு மிறவாதபடியினாலும் இந்தவிரு

பத்தெட்டுத் தத்துவமும் அவனவனுக்கு பிறத்த க்கென்கின்றதிலே சந்தேகந்தேவையில்லை.

இந்தத்தத்துவம் முப்பத்தாறில் எப்போதுந் தானாகவே காணப்பட்டதத்துவம்-க, எப்போதுந் தனக்கு அன்னியமாகவே காணப்பட்ட தத்துவம் எ, எப்போதுந்தானாகவுந் தனக்கு அன்னியமாகவும் அனுபவிக்கப்பட்ட தத்துவம்-உஅ, அதெங்ஙனென்னில் அவத்தாத்திரய சாட்சியா யிருக்கின்ற பிரமசைதன்னியம் எல்லாவவத்தையிலும் தானாகவேவிளங்குகையினாலும் மற்றதத்துவங்கள் போலத்தனக்கு அந்நியமாகக் காணப்படாதபடியினாலும் பிரமசைதன்ய மொன்றுமே தானாகவிருக்கப்பட்டது. பஞ்சபூதம்மாயை மாயாப்பிரதிவிம்பர் ஆகஏழும் தன்றொழிலான வெட்டுக்கொத்துழவு பஞ்சகிருத்தியம் தசாவதார முதலானதொழில்களொருக்காலுந் தன்னுடையதொழிலாகக் காணப்படாதபடியினாலும் இந்தஏழுதத்துவமுந் தனக்கு அன்னியமேயல்லாமல் தானாகமாட்டாது. மற்றஇருபத்தெட்டுதத்துவமும் நான் பிராமணன் நான் க்ஷத்திரியன் நான்வைசியன் நான்சூத்திரன் நான்பிரமச்சாரி நான்கிருகஸ்தன் நான்வானப்பிரஸ்தன் நான்சந்நியாசி நான்ஆண்பெண் கறுவல் சிவலை கட்டையன் நெட்டையன் நான்பருத்தேன் இளைத்தேனென்று

தானாகவழங்குகின்ற தூலசரீரம் ஆறுதத்துவமும் மற்றொருவேளையிலே தனக்குப் புறம்புபட்டு என் மாடென்கன் றென்றாற்போல என்சரீரம் பருத்த து இளைத்தது நரைத்தது என்சரீரம்பிறந்து இத் தனைநாள் ஆயிற்றென்று தான் வேறு தூலசரீரம் வேறாக வழங்குகின்றபடியினாலும் நான்கண்டேன் கேட்டேன் தொட்டேன் போகித்தேன் கொடுத் தேன் வாங்கினேன் நடந்தேன் புசித்தேன் சிந்தி த்தேன் விச்சயித்தேன் இந்தப்பஞ்சத்துக்குச் சீவி த்தேனென்று தானாகவழங்குகின்ற சூட்சுமசரீரத த்துவம் இருபதும் மற்றொருவேளையிலே தனக்கு ப்புறம்புபட்டு என்வீடென்னுடைமை யென்றாற் போல என்கண் ணென்கா தென்மூக் கென்னாக்கெ ன்கை யென்காலென்மன மென்புத்தி யென்னகங் காரமென்சித்த மென்பிராணனென்று தான்வேறு அவைகள்வேறாகவழங்குகின்றபடியினாலும் நானறி வேனறியேனென்று தானாக வழங்குகின்ற வஞ்ஞா னமுஞ்சிதாபாசனும் மற்றொருவேளையிலே தனக்கு ப்புறம்புபட்டு என்னஞ்ஞானம்என்சீவனென்றுவ ழங்குகின்ற படியினாலும் இந்த இருபத்தெட்டுதத் துவமுந் தானாகவுந்தனக்கன்னியமாகவும் வழங்கு கின்றது சித்தம். இப்படிச்சொன்ன குருவைப்பார் த்து சிஷ்யன்கேட்கும்படி இந்த இருபத்தெட்டுத த்துவமுந்தானானாற்சாட்சியைப்போலஒருதன்மை

யாகத் தோற்றவேண்டுமே யல்லாமற் பஞ்சபூதத் தைப்போலத் தனக்கன்னியமாகக்காணக்கணக்கில் லை. இந்தஇருபத்தெட்டுந் தனக்கன்னியமேயானு லெப்போதும்புறம்புபட்டேயிருக்கவேண்டுமல்லா மல் தானுகவழங்கக்கணக்கில்லை. தானுமாய்த் தனக் குஅன்னியமுமா யிருக்குமென்கின்றது இருட்டா தித்தனென்றாற்போலவும் வெள்ளாள தீட்சதனெ ன்றாற்போலவுஞ் சொன்னீர். இதுவிருத்தமென்கி ன்ற சங்கைக்கு பரமார்த்தமாகத் தானென்கின்ற தொருவகையும்அத்தியாசத்திஞலே தானென்கின் றதொருவகையும் ஆக இருவகையுமுண்டு. சாட்சி சைதன்னியத்தைத் தானென்கின்றது பரமார்த்தம ல்லாமல்உபசாரமல்ல. தனக்கன்னியமாயிருக்கின்ற விந்த விருபத்தெட்டையுந் தானென்கின்றது கட் டையைக் கள்ளனென்றாற்போலவும் பழுதையைப் ப்பாம்பென்றாற் போலவும் புத்திர தாராதிகளைத் தானென்றாற்போலவும் மயக்கமேயல்லாமல உண் மையல்ல. ஆகையினுல் அஞ்ஞானகாலந் தொடங் கித் தானல்லவென்று காணப்பட்ட தத்துவம்-எ- இப்போது இப்படிக்கொத்த விவேகம்பண்ணினபி ற்பாடு தானல்லவென்று காணப்பட்ட தத்துவம்- உஅ, ஆக இந்த முப்பத்தைந்து தத்துவங்களையும் அதற்குச்சொன்ன குணங்குறிகளுடனே கூடக்கா ண்கின்ற அறிவு கடத்தைப்பார்க்கின்றவன் கடத்

திற்குப் புறம்பாகவே இருந்து கடத்தைப் பார்க்கின்றதுபோல இந்த முப்பத்தைந்தையுங் காண்கின்றபேரறிவு முப்பத்தாறுந் தத்துவமாகிய அதுதானென்றறிந்து அதுதானே பரமசிவனென்று தெளிந்தவனே சிவதரிசனமுடைய சீவன்முத்தனென்று சொல்லப்படுமென்றுத்தரம்.

இப்படிப் பிரமமேதானென்றும் மற்ற முப்பத்தைந்து தத்துவமுந் தனக் கன்னியமென்றும் பிரித்தறியாத அவிவேகிகள் அகங்காரக் கிரந்தியினாலே புத்திரதாராதிகள் தவிக்கின்றதைத் தாந்தவிக்கின்றேனென்கின்ற மூடகரம்போல விந்தஇருபத்தெட்டினுடைய தொழிலையுந் தன்றொழிலென்றுமயங்குகின்ற படியினால் இந்த இருபத்தெட்டினாலும் ஆர்ச்சிக்கப்பட்ட புண்ணிய பாவங்களினாலுங் கட்டுப்பட்டு அந்தக் கன்மத்தின்படியே சனனமரணாதிசமுசாரத்திலே அடிபடுகிறோமென்று மயங்குவன். பிரமசைதன்னியமே தானென்றும் மற்றமுப்பத்தைந்துந் தானல்லவென்றுந் தெளிந்த விவேகிக்கு அகங்காரக்கிரந்தி யற்றபடியினால் இந்தவிருபத்தெட்டினுடைய தொழிலையும் நான்செய்யவில்லையென்றும் இந்தவிருபத்தெட்டும் புசிக்கின்றதைநான்புசிக்கவில்லை யென்றுந் திடப்படத்தேறி மயக்கமற்றிருக்கின்ற படியினால் இந்த விருபத்தெட்டி

றாலும் ஆர்ச்சிக்கப்பட்ட புண்ணியபாவங்களினின்றும் விடுபட்டுக் கன்மமில்லாதபடியினால் சனனமரணாதி சமுசாரமில்லாமல் முத்தனாகிப் பிரமமாத்திரமாகவே யிருப்பன். இவனைச்சீவன்முத்தனென்றுந் திடப்பிரக்ஞனென்றும் அதிவர்ணாச்சிரமியென்றுங் குணாதீதனென்றும் பகவத் பத்தனென்றும் பிராமணனென்றும் சொல்லுகின்ற இந்த வாறையுஞ் சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. சகலரும் இந்தத்தத்துவத்தை விசாரம்பண்ணி மோட்ச மடையக்கடவர்கள்.

நாஞ்சிவவாதக்கட்டளை

முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

---

சர்வஞ்சின்மயம்.